## NEWS CLIPPING

| | |
|---|---|
| **EVENT** | Chance to Be 7-Eleven Malaysia Franchisees |
| **PUBLICATION** | Malaysia Nanban |
| **PAGE/SECTION** | 3/News |
| **DATE** | 28 February 2018 |
| **TIME** | - |

# பிரான்சாயிஸ் முறையிலான 7 இலெவனின் தொழில் முனைவர்களுக்கான வர்த்தக வாய்ப்புகள்



7 இலெவன் வர்த்தகத் தலம்

கோலாலம்பூர், பிப். 28-

நாட்டின் முன்னோடி, முன்னணி வாடிக்கையாளர் வர்த்தகத் தலமான 7 இலெவன் மலேசியா, உள்ளூர் தொழில் முனைவர்களுக்காக மிக வெற்றிகரமான பிரான்சாயிஸ் முறையிலான வர்த்தக வாய்ப்புத் திட்டத்தை மீண்டும் வழங்குகிறது. 2,200 க்கும் மேற்பட்ட பல்வகை பொருட்களை விற்பனை செய்யும் தனது வர்த்தக கிளைகளை நிர்வகிப்பதிலும் சேவைகளை வழங்குவதிலும் வர்த்தக கூட்டாளிகளாக வருவதற்கு உள்ளூர் தொழில்முனைவர் களுக்கு இந்த வாய்ப்பை வழங்கி வருகிறது. மிக எளிய, நியாயமான, ஏற்கத்தக்க பிரான்சாயிஸ் முறையிலான இந்த கூட்டு வர்த்தகத்திற்கு வெறும் வெ.250,000 முதலீட்டில் முழு நேர அடிப்படையில் கடையை நடத்தவும் நிர்வகிக்கவும் தயாராக இருக்க வேண்டும்.

ஆகக் கடைசியான இந்த திட்டத்தின் வாயிலாக முழு வளர்ச்சி நிலையிலான வர்த்தக வாய்ப்புகளை எதிர்பார்க்கும் பொருத்தமான மனுதாரர்களை 7 இலெவன் மலேசியா எதிர்பார்க்கிறது. 7 இலெவன் மலேசியா, வாரத்தில் 7 நாட்களும் 24 மணி நேரமும் நிர்வகிக்கும் வியாபாரமாகும். இது முழு ஈடுபாட்டுடன் முழு நேரம் நிர்வகிக்கவல்ல தொழிலாகும். வேலையில்லா பட்டதாரிகள், வலுவான தொழில் முனைவர்கள் இதனை சொந்தமாக நிர்வகிக்க பொருத்த மானவர்கள். இதன் மூலம் விலைமதிப்பற்ற தொழில் அனுபவத்தை அவர்களால் பெற முடியும். அனைத்து புதிய பட்டதாரிகளும் தங்களின் சொந்த வர்த்தகத்தை நிர்வகிப்பது குறித்து பரிசீலிக்க வேண்டும். 7 இலெவன் மலேசிய பிரான்சாயிஸ் வர்த்தகம் கூட்டு முறையிலானதாகும். ஒருவர் கடுமையாக உழைப்பை வழங்குவதிலும் நீண்ட நேரம் வேலை செய்பவராகவும் இருப்பாரேயானால் இதில் வெற்றியை ஈட்டுவதில் பெரும் சிரமம் ஏதும் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டதற்கான ஆதாரங்களும் குறிப்புகளும் உள்ளன என்கிறார் பெர்ஜெயா குழுமத்தின் தோற்றுநர் டான்ஸ்ரீ வின்சென்ட் டான்.

பிரான்சாயிஸ் முறையிலான இந்த வர்த்தகத் தலத்தை நல்ல முறையில் நிர்வகிப்பது குறித்து கற்றுக்கொள்வார்களேயானால் அவர்கள் மேலும் கூடுதலான வர்த்தகத் தலங்களை நடத்துவதற்கான சூழ்நிலை ஏற்படுவதுடன் வர்த்தகத் தலங்களை பன்மடங்காக பெருக்கிக்கொள்ளும் அளவிற்கு உயர முடியும். அது அவர்கள் சொந்த வருமானத்தை பெருக்கி கொள்ளும் நிலையை உருவாக்கிவிடும்.

பலதரப்பட்ட அரசாங்க ஏஜென்சிகளிடமிருந்து கவரத்தக்க பிரான்சாயிஸ் முறை வர்த்தகத்திற்கான நிறைய நிதி வாய்ப்புகளும் உள்ளன. ஒரு சிறந்த தொழில்முனைவருக்கான ஆசையை நிறைவேற்றிக்கொள்வதற்கு அவர்கள் இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு முன்னேற வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார். இந்த ஆண்டு 7 இலெவன் மலேசியா, கிட்டத்தட்ட 200 புதிய கிளை வர்த்தகத் தலங்களை திறப்பதற்கும் இதர வர்த்தக தலங்களை புதுப்பிப்பதற்கும் 7 கோடி வெள்ளியை முதலீடு செய்யும் திட்டத்தை கொண்டுள்ளது. முடிவடைந்த ஆண்டில் தனது 2,225 வர்த்தகத் தலங்களில் பிரான்சாயிஸ் முறையிலான வர்த்தகத் தலங்கள் 10 விழுக்காட்டிற்கும் குறைவாகவே உள்ளன. எனவே தகுதி வாய்ந்தவர்கள் பிரான்சாயிஸ் முறையிலான இந்த வர்த்தகத்தை சொந்தமாக மேற்கொள்வதற்கும் தங்களின் வர்த்தகத்தை பெருக்கிக் கொள்வதற்கும் 7 இலெவன் மலேசியா அதிகமான வர்த்தகத் தலங்களை கொண்டுள்ளது.



2,200 வகை பொருட்களை கொண்டுள்ளது